<u>**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**</u>

***OS.No.136/2012*** ***Date: 17.03.2026***

***DW2 –*** ஆனந்தன்

<u>சாட்சி முன்னிலையானதின் பேரில் வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1ம் பிரதிவாதிக்கு இரண்டு மனைவிகள், அவர்கள் பெயர் பச்சியம்மாள், அயித்தம்மாள். வாதிகள் பச்சியம்மாளின் வாரிசுகள். 2ம் பிரதிவாதி அயித்தம்மாளின் மகன். தாவாவில் மொத்தம் 2 அயிட்ட சொத்துக்கள் உள்ளது. 1ம் அயிட்ட சொத்து பச்சியம்மாள் 08.06.1954ல் கிரையம் வாங்கினார் என்றால், சரிதான். பச்சியம்மாளுக்கு வாதிகளை தவிர வேறு வாரிசுகள் இல்லை. 2ம் அயிட்ட சொத்து வாதிகளுக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் பூர்வீக சொத்து என்றால், சரிதான். 1ம் அயிட்ட சொத்தை வாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரிதான். 2ம் அயிட்ட சொத்தை வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரிதான். தாவா சொத்துக்கள் 40 வருடங்களுக்கு முன்பே வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. தாவா சொத்துக்கள் இதுவரை பாகம் பிரிக்கப்படவில்லை என்றால், சரியல்ல. 09.02.1984ம் தேதி என் அப்பா கிரையம் வாங்கியது வீட்டு நிலம் என்றால், சரிதான். அதன் விஸ்தீரணம் 2½ செண்ட் என்றால், சரிதான். நான் சொத்தை கிரையம் வாங்கிய வருடம் நினைவில்லை, 30 வருடங்கள் இருக்கும். என்னுடைய கிரைய ஆவணத்திலும், தங்கவேல் கிரைய ஆவணத்திலும் வாதிகள் கையெழுத்து செய்யவில்லை என்றால், சரிதான். பாகம் பிரிக்காத சொத்தை நாங்கள் கிரையம் வாங்கியதால், அந்த கிரையம் செல்லாது என்றால், சரியல்ல. நான் சின்னபையனிடம் 21 செண்ட் நிலம் கிரையம் வாங்கினேன். நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு தனிப்பட்டா வாங்கவில்லை. என் பெயரில் அடங்கல் வாங்கி தாக்கல் செய்யவில்லையென்றால், சரிதான். என் பெயரிலும், தங்கவேல் பெயரிலும்

உள்ள கிரைய ஆவணங்கள் பெயரளவிலானது என்றாலும், நடைமுறைக்கு வரவில்லை என்றாலும், சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்தில் நான் சுவாதீனத்தில் உள்ளதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.

ஒப்பம்/- ஆனந்தன்

ஒப்பம்/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.